நாள் : 27.03.2025

வழக்கு எண் : SC.No.111/2021

அ.சா.2 : மகாதேவன்

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் நாரலப்பள்ளி முன்னாள் பஞ்சாயத்து தலைவரா என்றால் ஆமாம். தற்போது விவசாயம் செய்து வருகிறீர்களா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்திற்கும், தோட்டத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ. தூரம் இருக்கும். அ.சா.1 கிருஷ்ணனை யார் தாக்கினார்கள் என்பதை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் நீங்கள் இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் தான் தோட்டத்திற்கு வந்து சொன்னார் என்றால் சரிதான். நீங்கள் யாருக்கு தகவல் சொன்னீர்கள் என்றால் அவருடைய பிள்ளைகளுக்கு தகவல் சொன்னேன். நீங்கள் அவரை மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லவில்லை என்றால் அவருடைய பிள்ளைகள் வந்த பிறகு அவர்களுடன் அனுப்பி வைத்தேன். நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. சம்பவத்தை நீங்கள் நேரில் பார்க்கவில்லை, நேரில் பார்த்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஓம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

நாள் : 27.03.2025

வழக்கு எண் : SC.No.111/2021

அ.சா.4 : கௌதம் ராஜ்

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நீங்கள் அ.சா.1 கிருஷ்ணனின் பேரன் என்றால் சரிதான். நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கிருஷ்ணன் உங்கள் தாத்தா, அ.சா.3 ராஜ்குமார் உங்கள் மாமா என்றால் சரிதான். அவர்கள் இருவரும் கேட்டுக் கொண்டதால் உங்களை சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரிலோ, அ.சா.3 வாக்குமூலத்திலோ கத்தியைக் கொண்டு எதிரிகள் தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான், கட்டையைக் கொண்டு தாக்கினார்கள். உங்கள் தாத்தா வண்டி ஓட்டத் தெரியாமல் ஓட்டி அவராகவே கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக் கொண்டார், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றால் சரியல்ல, தாக்கியதால் தான் காயம் ஏற்பட்டது. நீங்கள் சொல்வது போல் யாரும் அவரை தாக்கவில்லை, போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பெயரில் பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

நாள் : 27.03.2025

வழக்கு எண் : SC.No.111/2021

அ.சா.5 : ராஜசேகரன்

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் நீங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.